**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**ஆகஸ்ட் 2022 – பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு**

**பள்ளிகள் / சேவை மையங்களுக்கான அறிவுரைகள்**

ஆகஸ்ட் 2022 – பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு பள்ளிகள் / சேவை மையங்களில் (Service Centre) தனித் தேர்வர்கள் ஆன்லைனில் பதிவு செய்யும் போது தகுதியான தனித் தேர்வர்களை அனுமதிப்பதற்கான அறிவுரைகள்

1. தனித்தேர்வர் விவரங்களை ஆன்–லைன் பதிவு செய்த பின்னர் "Confirmation Copy" எனப்படும் விண்ணப்பமும் Registration Slip என்ற ஆவணமும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் வடிமைக்கப்பட்டுள்ளது.

2. ஆன்–லைனில் பதிவு செய்த "Confirmation Copy" எனக் குறிப்பிட்ட விண்ணப்பத்தோடு Registration Slip மற்றும் உரிய இணைப்புகளையும் இணைத்துப் பெற வேண்டும்.

3. ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும்போது அத்தேர்வர்களின் **மதிப்பெண் சான்றிதழின் நகலினை ஆய்வு செய்து தோல்வியுற்ற பாடத்திற்கு மட்டும் பதிவேற்றம் செய்ய வேண்டும் மற்றும் மே 2022 பொதுத் தேர்வில் தேர்ச்சிபெறாத மாணவர்கள் தனித் தேர்வராக விண்ணப்பிக்கும்போது அத் தேர்வர்களின் தற்காலிக சான்றிதழின் (Provisional Certificate) நகலினை ஆய்வு செய்து தோல்வியுற்ற பாடத்திற்கு மட்டும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.** மேலும், தேர்வருக்கு வழங்கப்படும் "Candidate Copy"–யில் கையொப்பம் பெறும் முன்னர் தேர்வரை விண்ணப்பித்த பாடம் / பாடங்களை சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தல் வேண்டும்.

4. "Confirmation Copy"–யின் மேல் வலதுப்புறத்தில் உரிய தனித்தேர்வரின் ஸ்கேன் செய்யப்பட்ட புகைப்படம் இடம் பெற்றிருக்கும்.

5. விண்ணப்பத்தின் கீழ் தனித் தேர்வர் உரிய இடத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

..2..

6. S வகை தனித் தேர்வர்கள் மற்றும் SP வகை நேரடித் தனித் தேர்வர்கள் இணைக்க வேண்டிய ஆவணங்களின் விவரம், இவ்வலுவலக அறிவிக்கை மற்றும் "Confirmation Copy"–ல் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதனை சரிபார்க்க வேண்டும்.

7. மார்ச் 2016 முதல் தேர்வெழுதி நிரந்தரப் பதிவெண் (Permanent Register Number) கொண்டுள்ள தேர்வர்களுக்கு, விண்ணப்பிக்கும்போது அத்தேர்வர்களுக்கான நிரந்தரப் பதிவெண்ணை கொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

8. அறிவியல் பாடத்தை பொருத்தவரை கருத்தியல் / செய்முறை என்ற இரு பகுதிகளில் எந்த பகுதியில் தோல்வியடைந்தாலும் தோல்வி அடைந்த பகுதிக்கு மட்டும் தேர்வெழு விண்ணப்பிக்க வேண்டும் (கருத்தியல் தேர்வில் தேர்ச்சி பெற குறைந்தபட்ச மதிப்பெண் 75–க்கு 20–ம், செய்முறைத் தேர்வில் 25–க்கு 15–ம் பெற வேண்டும்.)

9. தேர்வுக் கட்டணத்தினை பணமாக செலுத்த தனித் தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனித் தேர்வர்கள் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணத் தொகை Registration Slip–ல் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித் தேர்வரின் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, தகுதியினை உறுதி செய்த பின்னர் தேர்வுக் கட்டணத்தை பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். தகுதியில்லா நிகழ்வுகளில் உரிய காரணத்தைத் தெரிவித்து தனித்தேர்வரின் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்.

10. Registration Slip–ல் இரண்டு பாகங்கள் உள்ளது. முதல் பாகம் Department Copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். இரண்டாம் பாகம் Candidate Copy எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். தனித் தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்ற பின்னர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்த பணியாளர் Fees paid எனக் குறிப்பிட்டு சுருக்கொப்பமிட வேண்டும். இப்படிவத்தில் தனித்தேர்வரும் கையொப்பமிட்டிருக்க வேண்டும். Candidate Copy யினை மட்டும் தனித்தேர்வருக்கு வழங்க வேண்டும்.

11. சேவை மையத்திற்கு நேரில் வருகை தரும் தேர்வர் பின்வரும் வகைகளுள் எவ்வகையைச் சார்ந்தவர் என்பதனைக் கேட்டு உறுதிசெய்த பின்னர் சரியான வாசகத்தை Click செய்து விண்ணப்பத்தினைப் பதிவுசெய்ய வேண்டும்.

i. **SSLC – Direct Private**

முதன்முறையாக ஆகஸ்ட் 2022–ல் பத்தாம் வகுப்பு தேர்வெழுத விண்ணப்பிப்பவர்களின் விவரங்களை பதிவு செய்ய இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

ii. **SSLC – Private (With Permanent Register Number)**

பழைய பாடத்திட்டத்தில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் நிரந்தரப் பதிவெண் கொண்டு பத்தாம் வகுப்பு தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், தற்போது தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை எழுதுவதற்கு விண்ணப்பிப்பவர்களின் விவர்ங்களைப் பதிவு செய்தவற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

iii. **SSLC – Private (Without Permanent Register Number)**

பழைய பாடத்திட்டத்தில் நிரந்தர பதிவெண் இல்லாமல் பத்தாம் வகுப்பு தேர்வெழுதி தேர்ச்சி பெறாமல், தற்போது தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை எழுதுவதற்கு விண்ணப்பிப்பவர்களின் விவரங்களைப் பதிவு செய்வதற்கு இந்த வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

12. **S வகையினர் (ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்றவர்கள்) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை**

- ஏற்கனவே எஸ்.எஸ்.எல்.சி தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்ற பாடங்களின் மதிப்பெண் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்

13. **<u>SP வகையினர் (நேரடித் தனித் தேர்வர்கள்) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை</u>**

- எட்டாம் வகுப்பு தேர்ச்சி / ஒன்பதாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு படித்தமைக்கான அசல் மாற்றுச் சான்றிதழ்.
- மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் தேர்வெழுதி தோல்வியுற்ற தேர்வர்கள் அன்னாரின் அனைத்து அசல் மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத் தேர்வுகள் சேவை மையங்களில் ஒப்படைத்தல் வேண்டும்.

14. **<u>மாற்றுத் திறனாளிகள்</u>**

**பார்வையற்றோர் மற்றும் காது கேளாதோருக்கு மேற்குறிப்பிட்ட தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.**

தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒருமணி நேரம் போன்ற சலுகைகளை பெற விரும்பினால் உரிய மருத்துவச் சான்றிதழ்களை இணைத்து சமர்பிக்க வேண்டும். மேற்படி மாற்று திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த விவரத்தினை www.dge.tn.gov.in இணையதளம் மூலம் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

15. **<u>முக்கியக்குறிப்பு:-</u>**

முதல் முறையாக நேரடி தனித்தேர்வராக பத்தாம் வகுப்பு தேர்வினை எழுத விரும்புவோர் மற்றும் 2012-ஆம் ஆண்டுக்கு முன்னர் பத்தாம் வகுப்பு அறிவியல் பாடத்தில் தேர்ச்சி பெறாதோர், ஆகிய விண்ணப்பதாரர்கள் அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்புக்கு 27.06.2022 முதல் 04.07.2022 வரையிலான நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

ஒம்/-
இணை இயக்குநர் (பணியாளர்),

**இடம்:** சென்னை - 600 006.

**நாள்:** 24.06.2022